2022 மார்ச் 23] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

6 மாத காலமாக பாலியல் வன்முறையில் ஈடுபட்டு, கூட்டு பலாத்காரம் செய்துள்ளனர். இதுபோன்று எத்தனை பெண்களை அவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார்கள் என்பது தெரியவில்லை. இதை முறையாக விசாரித்து, இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குக் கடுமையான தண்டனையைப் பெற்றுத் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) வேலூர், சி.எம்.சி. மருத்துவமனை மருத்துவர்கள் மீது தாக்குதல் மற்றும் பாலியல் வன்முறை

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அடுத்து, இந்த வாரம் வேலூர், காட்பாடியில் இரவுக் காட்சி பார்த்துவிட்டு, ஓர் ஆண் மருத்துவர் மற்றும் ஒரு பெண் மருத்துவர் ஆட்டோவில் வீடு திரும்பியபோது, ஆண் மருத்துவரை தாக்கிவிட்டு, பெண் மருத்துவரைக் கடத்திச் சென்று, கூட்டு பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இதுகுறித்து புகார் வரப் பெறவில்லை என்றும், குற்றம் செய்தவர்களை விசாரித்துவிட்டு, காவல் துறை விடுவித்துவிட்டதாகவும் தகவல் தெரிகிறது. குற்றம் செய்தவர்களே குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், காவல் துறையினர் குற்றம் செய்தவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இரண்டாவது சொன்னதற்குப் புகார் இருக்கிறதா?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதைத்தான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குத்தான் பதில் கேட்கின்றேன்.*

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு சொல்லட்டுமா அல்லது அப்புறம் சொல்லட்டுமா? சரி, நீங்கள் முடித்துவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முடித்துவிடட்டும்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ** ஆகவே, காவல் துறை இரும்புக்கரம் கொண்டு குற்றங்களைத் தடுப்பதற்கு, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கையில் அமர்ந்துகொண்டே பேசக் கூடாது. எல்லோரும் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையினுடைய கவனத்திற்கு சில குறிப்புகளைச் சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இருக்கையில் அமர்ந்து கொண்டே பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

(இ) சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசிக்கும் திரு. சக்திவேல், ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்களின் பாதுகாவலர் தாக்கப்பட்டது

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசித்து வருபவர் திரு. சக்திவேல். ஆயுதப்படை காவலரான இவர் ஓய்வுபெற்ற நீதிபதியும், முன்னாள் காவல் ஆணையத் தலைவருமான திரு. சி.டி. செல்வம் அவர்களுக்குப் பாதுகாவலராகப் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், நேற்றையதினம், காலையில் ஓய்வுபெற்ற நீதிபதியுடன் காரில் அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது, அசோக் நகர் சிக்னலில் உள்ள Hot Chips கடைக்கு அருகே வருகின்றபோது, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. உடனே, சக்திவேல் காரிலிருந்து இறங்கிவந்து போக்குவரத்தைச் சரி செய்ய முயன்றுள்ளார். அப்போது அந்த வழியாக வந்த, அடையாளம் தெரியாத 3 பேர் சக்திவேலுடன் தகராறில் ஈடுபட்டதுடன், அவர்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக வெட்டிவிட்டு, இரு சக்கர வாகனத்தில் தப்பிச் சென்றுவிட்டனர். தகவலறிந்து, சம்பவ இடத்திற்கு வந்த அசோக் நகர் போலீசார் படுகாயம் அடைந்த சக்திவேலை மீட்டு, வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர். பின்னர், தகவலறிந்த சென்னை காவல் ஆணையாளர், சம்பவ

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 மார்ச் 23] [*திரு. எடப்பாடி K. பழனிசாமி*]

இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். மேலும், அசோக் நகர் போலீசார் இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து, சி.சி. டி.வி. காட்சிகளை வைத்து, தற்போது மூன்று பேரையும் தேடி வருகின்றார்கள். ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து பதிலை எதிர்பார்த்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டாவதாக சொன்ன கருத்திலுள்ள புகார், ஆதாரமில்லாதது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. புகார் எங்கும் பதிவாகாமல், நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) அதை மட்டும் நீக்கிவிட்டு, மீதி அனைத்துக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

(ஆ) வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை மருத்துவர்கள்மீது தாக்குதல் மற்றும் பாலியல் வன்முறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி, சில பிரச்சினைகளை, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து சில செய்திகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.*

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், அவர் ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி இந்திரா நகரைச் சேர்ந்த இராமன் என்பவர் கடந்த 17–3–2022 அன்று சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் அளித்த புகாரில் வ.உ.சி. நகரைச் சேர்ந்த பாலா (எ) பரத், மணிகண்டன் உள்ளிட்ட சிலர் தன்னை குடிபோதையில் தாக்கியதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார். இப்புகார் தொடர்பாக, காவல் துறையினர் பரத், மணிகண்டன் உள்ளிட்ட மூவரைப் பிடித்து விசாரணை மேற்கொண்டபோது, 17–3–2022 அன்று அதிகாலை கேலக்சி திரையரங்கம் அருகே ஓர் ஆண் மற்றும் பெண் ஆகியோர் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென ஆட்டோவில் ஏறியபோது, அவர்களை தனியிடத்திற்கு அழைத்துச்சென்று

பரத், சந்தோஷ், மணிகண்டன் உள்ளிட்ட ஐவர், அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அவருடன் இருந்த ஆண் நபரை ஏ.டி.எம்.-க்கு அழைத்துச்சென்று சுமார் ரூ.40,000/- பறித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண் சி.எம்.சி. மருத்துவமனையில் மருத்துவராகப் பணிபுரியும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பெண் என்பதும், ஆண் நபர் அதே மருத்துவமனையில் பணிபுரியும் நாக்பூரைச் சேர்ந்த பிரனீத் ராஜ் கஷ்யப் என்பதும் தெரிய வந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் அவரது சொந்த மாநிலத்திற்குச் சென்றுள்ள நிலையில், நேற்று (22-3-2022) இணையவழி வாயிலாக அளித்த புகாரில், வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 147, 148, 342, 365, 368, 376(D), 376(E), 395, 397, 506(ii) உடன் இணைந்த பிரிவு 4-தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பரத் உள்ளிட்ட நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முற்பகல் 11-55

(இ) சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசிக்கும் திரு. சக்திவேல், ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்களின் பாதுகாவலர் தாக்கப்பட்டது–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, இன்னொன்றையும் சொன்னார்கள். அதாவது, ஓய்வுபெற்ற நீதியரசர் காரில் சென்று கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தையும் அவர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 4-வது காவல் ஆணையத்தின் தலைவரும், ஓய்வுபெற்ற நீதிபதியுமான திரு. சி.டி. செல்வம் அவர்கள் நேற்று, 22-3-2022 ஆம் தேதி தனது காரில் தனி பாதுகாவலர், தலைமைக் காவலர் திரு. சக்திவேல் என்பவரோடு அசோக் நகர், நூறடி சாலையில் உள்ள கே.கே. நகர் காவல் நிலையம் அருகே சென்று கொண்டிருந்திருக்கிறார்கள். அப்பொழுது அவருடைய வாகனம் அப்பகுதியிலுள்ள போக்குவரத்து சிக்னல் அருகே நின்றபோது, இருசக்கர வாகனத்தில் சென்ற அடையாளம் தெரியாத 3 நபர்கள் ஆணையத் தலைவரின் வாகனத்தின்முன்பு தங்களது வாகனத்தை நிறுத்தியிருக்கிறார்கள். உடனே தனி பாதுகாவலர் திரு. சக்திவேல் அவர்கள் வாகனத்தை நகர்த்த கூறியிருக்கிறார். இதனையடுத்து,